# ஆபத்துக் காரணிகள்



நீங்களோ அல்லது உங்கள் துணைவரோ வேறு நபர்களுடன் பாலியல் ரீதியான தொடர்பில் இருப்பது.



18 வயதிக்கு முன்னர் பாலியல் ரீதியான தொடர்புகளில் இருத்தல்.



குறைந்தளவான நோய் எதிர்ப்பு சக்தி
- HIV-AIDS எய்ட்ஸ்
- காசநோய் போன்ற நோய் தாக்கங்களிற்கு உட்பட்டிருத்தல்



புகைப்பிடித்தல்



போசாக்கு பற்றாக்குறை



பெண் உறுப்பின் சுத்தம் பேணாமை

மேலுள்ள ஆபத்துக் காரணிகள் ஏதும் உங்களிடம் காணப்பட்டால்,

**உங்களுக்கு கர்ப்பப்பைக் கழுத்து புற்றுநோய்வருவதற்கான சந்தரப்பம் அதிகம்**

# அறிகுறிகள்

- இரு மாதவிடாய்களுக்கிடையில் ஏற்படும் அசாதாரண இரத்தப்போக்கு
- உடலுறவின் போது அல்லது அதற்குப் பின்னர் ஏற்படும் வலி மற்றும் இரத்தப்போக்கு
- நிரந்தர மாதவிடாய் நிறுத்தத்திற்கு பின்னர் ஏற்படும் இரத்தப்போக்கு
- யோனியிலிருந்து ஏற்படும் துர்நாற்றத்துடன் கூடிய திரவங்களின் வெளியேற்றம்.

இந்த அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருந்தால், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனை அல்லது தகுதிபெற்ற மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெறவும்.




தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்
பொது சுகாதார வளாக கட்டிடம்
எண் 555/5, எல்விடிகல மாவத்தை, கொழும்பு-5
தொலைபேசி எண் - 0113159227


www.nccp.health.gov.lk



# கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய்



- தடுக்கமுடியும்
- குணப்படுத்தமுடியும்
- வெல்லமுடியும

தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்
சுகாதார அமைச்சு


CamScanner
CamScanner

## தடுக்கமுடியும்

**பெண்களுக்கிடையே காணப்படும் ஒரு பொதுவான புற்றுநோயாகும்.**

பிரதான நோய்க்காரணியாக மனித பப்பிலோமா வைரஸ் (HPV) உள்ளது.

**HPV க்கு எதிரான தடுப்பூசி கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோயை தடுப்பதற்கான சிறந்த முறையாக உள்ளது**

பாடசாலை நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 10 - 11 வயதுடைய உங்கள் பெண் பிள்ளைகளுக்கு தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுங்கள்.



## தடுக்கும் வழிகள்

- பெண்கள் தகுந்த வயதில் HPV க்கு எதிரான தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுதல்
- வாழ்க்கைத்துணை தவிர்ந்த ஏனைய நபர்களுடனான பாலியல் ரீதியான தொடர்புகளைத் தவிர்த்தல்
- பாதுகாப்பான உடலுறவு முறைகளை பயன்படுத்துதல்
- புகைப்பிடித்தலை நிறுத்துதல்
- ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தல்



## தடுக்கமுடியும் குணப்படுத்தமுடியும்

**முன்கூட்டியே கண்டறிவதற்கான பரிசோதனைகள்**

- **PAP** பரிசோதனை
- **HPV DNA** பரிசோதனை

அருகிலுள்ள பெண் நல கிளினிக்குகள் (WWC) மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் (MOH) 35 வயது மற்றும் 45 வயதுடையவர்கள் இப்பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்.



## பிற சேவை மையங்கள்

- புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையங்கள்
- பெண்ணியல் சார்ந்த மருத்துவமனைகள்

CamScanner
CamScanner